Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO.141/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5,Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தீபக்குமார் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | வெங்கடேசன் | தொழில் | கம்பி வேலை |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 24th day of May 2022.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை.-**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கம்பி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான், (**பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). கடந்த 22.07.2018 அன்று காலை சுமார் 10.15 மணியளவில் கௌதமாபேட்டை பூங்கா அருகே சம்பவம் நடந்த இடத்தில் போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதற்காக மேலே குறிப்பிட்ட கையெழுத்தை நான் போட்டேன். பின்பு போலிசார் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கத்தி ஒன்றை என்முன் கைப்பற்றினார்கள். அதற்கும் நான் சாட்சியாக இருந்து மேலே குறிப்பிட்டுள்ள கையெழுத்துக்களை நான் செய்தேன். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

எதிரி ஆஜரில் இருந்தார். எதிரி தரப்பு கற்றரிந்த வழக்கறிஞர் ஆஜரில் இல்லை அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

மறு விசாரணை - இல்லை